**செய்தி வெளியீடு எண் : 087** **நாள்: 12.01.2022**

**செய்தி வெளியீடு**

# தமிழ்நாட்டில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள 11 அரசு மருத்துவக் கல்லூரிகள் மற்றும் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்திற்கான புதிய கட்டடம் ஆகியவை காணொலிக் காட்சி வாயிலாக மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு.நரேந்திர மோடி அவர்கள் புது டெல்லியிருந்து இன்று (12.1.2022) காணொலிக் காட்சி வாயிலாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு.ஆர்.என். ரவி மற்றும் மாண்புமிகு ஒன்றிய மருத்துவம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் முனைவர் மன்சுக் மாண்டவியா ஆகியோர் முன்னிலையில் ரூ.4,080 கோடி செலவில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள 11 அரசு மருத்துவக் கல்லூரிகளையும், சென்னை பெரும்பாக்கத்தில் ரூ.24.65 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவன கட்டடத்தையும் திறந்து வைத்தார்.

ஒரு மாநிலத்தின் வளர்ச்சிக்கான குறியீடுகளில் ஒன்றாக, மக்கள் நல்வாழ்வு விளங்கி வருகிறது. மக்கள் நல்வாழ்வு என்பது, மாநிலத்தில் உள்ள மருத்துவக் கட்டமைப்புகள், மனிதவளம் மட்டுமல்லாமல், மாநிலத்தில் வாழும் மக்களின் ஆரோக்கியமான வாழ்க்கை முறையை மேம்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகளையும் சார்ந்தது. தமிழ்நாட்டில், பொது சுகாதாரம் மற்றும் மருத்துவக் கட்டமைப்புகள் மாநிலத்தில் உள்ள கடைக்கோடி மக்களுக்கும் கிடைக்கும் வகையில், கண்ணொளித் திட்டம், 108 ஆம்புலன்ஸ் சேவை திட்டம், மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், வருமுன் காப்போம் திட்டம், மருத்துவக் கல்லூரி இல்லாத மாவட்டங்களில் அரசு மருத்துவமனையுடன் கூடிய மருத்துவக் கல்லூரிகள் போன்ற பல்வேறு திட்டங்கள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் செயல்படுத்தப்பட்டது.

அதேபோன்று, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான தமிழ்நாடு அரசு, மக்களைத் தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம் – நம்மைக் காக்கும் 48 திட்டம் போன்ற மக்கள் நல்வாழ்விற்கான பல புதிய திட்டங்களை செயல்படுத்தி வருவதோடு, தமிழகத்தில் மருத்துவ உட்கட்டமைப்பு வசதிகளையும் மேம்படுத்தி வருகிறது. தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்ட மக்களுக்கும் தரமான மருத்துவ சிகிச்சை அளித்திடும் வகையில், எல்லா மாவட்டங்களிலும் அரசு மருத்துவக் கல்லூரி அமைத்திட அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

அந்த வகையில், அரசு மருத்துவக் கல்லூரி இல்லாத மாவட்டங்களான விருதுநகர், கள்ளக்குறிச்சி, நீலகிரி, இராமநாதபுரம், நாமக்கல், திருப்பூர், திருவள்ளூர், கிருஷ்ணகிரி, திண்டுக்கல், அரியலூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய 11 மாவட்டங்களில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள அரசு மருத்துவக் கல்லூரிகளை மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள் புது டெல்லியிலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

புதிதாக அமைக்கப்பட்டுள்ள 11 அரசு மருத்துவக் கல்லூரிகளில் மொத்தம் 1450 எம்.பி.பி.எஸ். படிப்பிற்கான இடங்கள் கூடுதலாக கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்த 11 அரசு மருத்துவக் கல்லூரிகள் மற்றும் மருத்துவமனைகளில் 11,200 மருத்துவ வல்லுநர்கள் மற்றும் பணியாளர் பணியிடங்கள் புதிதாக உருவாக்கப்படுகின்றன. இதன்மூலம், இம்மாவட்டங்கள் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் வாழும் சுமார் ஒன்றரை கோடி மக்களுக்கு தரமான உயர் மருத்துவச் சிகிச்சைகள் கிடைக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**<u>செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்</u>**

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மேற்கொண்ட பெரும் முயற்சியால், உலகின் மூத்த மொழியாம், சொல் வளமும், இலக்கிய வளமும் கொண்ட தமிழ் மொழியை 14.10.2004 அன்று ஒன்றிய அரசு செம்மொழியாக அறிவித்தது. அதனைத் தொடர்ந்து முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 18.8.2007 அன்று செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் தொடங்கி வைக்கப்பட்டது.

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் 41 செவ்வியல் தமிழ் நூல்களின் ஆய்வுக்கு முதலிடம் வழங்கி வருகிறது. தொல்பழங்காலம் முதல் கி.பி. 6ஆம் நூற்றாண்டு வரையிலான காலப் பகுதிக்குள் தோன்றிய இலக்கிய, இலக்கணம் குறித்த ஆய்வினை மேற்கொள்ள உருவாக்கப்பட்ட இந்நிறுவனம் தமிழ் மொழி ஆய்விலும், அதன் மேம்பாட்டிலும் தனிக்கவனம் செலுத்தி வருகிறது. செம்மொழித் தமிழின் தொன்மையையும், தனித் தன்மையையும், அவற்றின் மரபுத் தொடர்ச்சியையும் ஆராய்ந்து பாதுகாப்பதை முக்கிய நோக்கமாக இந்நிறுவனம் கொண்டுள்ளது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக பதவியில் இருந்தபோது 2007ஆம் ஆண்டு சென்னை, பெரும்பாக்கத்தில் 16.586 ஏக்கர் நிலத்தை செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்திற்கு வழங்கினார். அந்நிலத்தில் ரூ.24.65 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவன கட்டடத்தை மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள் காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனத்திற்கான கட்டடம் தரை மற்றும் மூன்று தளங்களுடன் சுமார் 70,000 சதுர அடி பரப்பளவில் கட்டப்பட்டுள்ளது.

தரைதளத்தில் நூலகம் மற்றும் கருத்தரங்கக் கூடங்களும், முதல் தளத்தில் அலுவலக அறைகளும், முதல் தளத்தில் மின் நூலகமும், இரண்டாம் மற்றும் மூன்றாம் தளங்களில் கல்விசார் அலுவலர்களுக்கான அறைகளும், பன்னோக்கு ஒலி–ஒளிக் காட்சிக் கூடமும் அமைந்துள்ளன.

இந்த நிகழ்ச்சியில், காணொலிக் காட்சி வாயிலாக மாண்புமிகு ஒன்றிய மருத்துவம் மற்றும் குடும்ப நலத்துறை இணை அமைச்சர் டாக்டர் பாரதி பிரவின் பவார், தலைமைச் செயலகத்திலிருந்து மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு.எ.வ. வேலு, மாண்புமிகு தொழில், தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாடுத் துறை அமைச்சர் திரு.தங்கம் தென்னரசு, மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன், தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, இ.ஆ.ப., மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை செயலாளர் மருத்துவர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் திரு.மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டனர்.

************

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**